DATE; 16.06.2026

RTROP No.283/2022

CW1 – சின்னதம்பி

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டார்).

<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சிக்கம்பட்டி கிராமத்தில் 24 சதுர மீட்டர் நிலம் என்னிடமிருந்து ஆர்ஜிதம் செய்யப்பட்டது. இன்றைய தேதி வரை மீதி உள்ள நிலத்தில் விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்த காரணத்தினால் எனது வாழ்வாதாரம் எதுவும் கெட்டுப் போகவில்லை என்றும் இன்றைய செய்தி வரை நான் விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரிதான்

ஆர்ஜிதம் சம்பந்தமாக 21.9.2019 அன்று அறிவிப்பு வந்தது என்றால் சரிதான். அவ்வாறு அறிவிப்பு கிடைத்த பிறகு தாசில்தார் அலுவலகத்தில் ஆஜராகி உரிய ஆவணங்களை சமர்ப்பித்தேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் வழிகாட்டு மதிப்பீடாக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணம் ஆர்ஜிதம் ஏற்பட்ட பிறகு அரசாங்கத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட வழிகாட்டு மதிப்பீடு என்றால் சரிதான். எங்கள் நிலத்தில் வீடு மற்றும் கடை அமைந்துள்ளது காட்டக்கூடிய ஆவணம் எதையும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால். சரிதான் இன்றைய தேதி வரை அந்த நிலம் விவசாய நிலமாக தான் உள்ளது என்றும், அது சம்பந்தமான இழப்பீடு தொகை சரியாக தான் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எங்கள் நிலத்திற்கு

பக்கத்தில் திருமண மண்டபம், நீச்சல் குளம், பெட்ரோல் பங்க் போன்றவை அமைந்துள்ளது என்பதை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த நிலம் மனைநிலம் என்பதை காட்டக் கூடிய வகையில் டிடிசிபி அப்ரூவல் எதுவும் வாங்கி இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கிராமத்தில் அமைந்துள்ள நிலம் என்பதால் அது சம்பந்தப்பட்ட அப்ரூவல் எதுவும் கிடையாது. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் ஆர்ஜித அறிவிப்பிற்கு பிந்தைய ஆவணங்கள் என்றும், எனவே அவை ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல என்றும், ஆர்ஜித நிலத்திற்கான உரிய மதிப்பீடு முறையாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல

மறுவிசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல
என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு
படித்து காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்
கொள்ளப்பட்டு என் முன்னிலையில் சாட்சியால்
கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.06.16 19:52:56 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
சேலம்.